10) மஹபொல செலவினமானது நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு திட்டப்பகுதி, திறைசேரிப்பகுதி எனும் இரண்டு வகையீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. 2004 மார்ச்சில் கருத்திட்டப்பகுதி மூடப்பட்ட போதிலும் கருத்திட்ட பிரிவின் இணக்கப்பாடுகள் நிறைவடையும் வரையில் விளக்கமளித்தல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

11) i கருத்திட்ட வேலைகளுக்காக பொருள் வடிவில் நிதியத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட நன்கொடைகள் நிதியத்தின் ஐந்தொகையில் காட்டப்படவில்லை. அத்துடன் மீள் ஒதுக்கீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பட்டியல் மநநி இற்காக வருமானம் உழைப்பதில்லை.

ii மூலதன வடிவில் நிதியத்தினால் வழங்கப்பட்ட நன்கொடைகளும் மானியங்களும் நிதியத்தின் உழைப்புத்திறன் மீது தாக்கத்தை விளைவிக்காத ஏனைய நிறுவனங்களுக்கு குறித்த ஆண்டு காலப்பகுதிக்கான செலவினமாக பதிவளிப்பு செய்யப்பட்டன. கடந்த ஆண்டுக்கான அத்தகைய செலவின மூலதனத்தின் தன்மையானது குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

12. இததொறி கருத்திட்டத்தில் முதலீடு செய்வதற்காக பெறப்பட்ட தேஅவ கடன் மீது செலுத்தப்பட்ட வட்டியான ரூபா 175 மில்லியன் முதலீட்டின் பெறுமதி அதிகரிக்கப்பட்டதிலிருந்து முதலீட்டு செலவினமாக முதலாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இம்முதலீடு புதிய உடன்படிக்கையின் கீழ் இததொறி இற்கு குத்தகையாக மநநி இனால் சொத்து வடிவில் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு மாற்றப்படும். ஆகையால் நடைமுறையானது மாற்றப்பட்டுள்ளது. தேசிய அபிவிருத்தி வங்கியின் நிலைத்திருக்கின்ற மீதியானது கொடுத்து தீர்க்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், செலுத்தப்பட்ட வட்டியானது 30 வருடங்களுக்கு அதிகாரமளிக்கப்படாததாகும்.

13. இததொறி மாலபே கருத்திட்டம் அமைப்பதற்கான நிதி வரையறுக்கப்பட்ட இலங்கை தகவல் தொழில்நுட்ப (உத்தரவாத) நிறுவகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. இக்கருத்திட்டத்தின் மீதான சேர்ந்த செலவினம் ஐந்தொகையில் முதலீடாக சேர்க்கப்பட்டிருந்தது.

14. (அ) இததொறி உடன் எட்டு வருடங்களுக்கென மாலபே மஹபொல வளாகத்துடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையானது நீக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு தரப்பினாலும் 2005.11.14 ஆம் திகதியன்று 30 வருடங்களைக் கொண்ட அடுத்து வரும் இரண்டு கட்டங்களைக்

கொண்ட 60 ஆண்டுகளுக்கான புதிய உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.

முக்கியமான பண்புகள்:

i 8 மில்லியன் அல்லது தேறிய இலாபத்தில் 20% என்பவற்றில் மநநி இற்கு வருடாந்தம் எது உயர்வானதோ இததொநி வழங்குதல் வேண்டும்.

ii இததொநி பட்டப்படிப்பு பாடநெறிக்காக வருடாந்தம் 25 புலமைப் பரிசில்களை வழங்குதல்

iii சபை உறுப்பினரில் மூன்றில் ஒரு பங்கினரைக் கொண்டதாக மநநி இலிருந்து ஐந்து உறுப்பினர்கள் இததொநி இன் பணிப்பாளர் சபையை பிரதிநிதித்துவம் செய்வர்.

மேற்குறித்த உடன்படிக்கையின்படியான உரிய மாற்றங்கள் அமுல்படுத்தப்பட்டன.

(ஆ) இந்த உடன்படிக்கையிலுள்ள கணக்கீட்டு கொள்கை மீது 2006.01.01 இலிருந்து பின்வரும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

i இததொநி இன் முதலீட்டு பெறுமதியானது 2006.01.01 இலிருந்து ரூபா 373,579,392/- ஆக உடன்படிக்கையில் குறிப்பிடப்படும்

ii கடன் மீதிக்கான வட்டியான ரூபா 175 மில்லியன் செலவினமாக கருதப்படும்

iii இததொநி இனால் 2007 ஆம் ஆண்டிலிருந்து உள்வாங்கப்படும் மாணவர்களுக்கு அவர்களின் செலவுக்காக புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

iv மஹபொல வளாகத்திலுள்ள கட்டிடங்களின் கொள்விலையின் மிகைப்பெறுமதியானது 2006 ஆம் ஆண்டிலிருந்து இல்லாமல் செய்யப்பட்டது.

v முன்னைய புரிந்துணர்வு உடன்படிக்கையானது வலுவற்ற ஏற்பாடாக கருதப்படும்.

15. நிதியத்தை முகாமை செய்வதற்காக உடன்படிக்கை கைச்சாத்திட்டதன் கீழ், மஹபொல பொறுப்புக்கள் மநநி இன் முற்றுமுழுதான துணைக்கம்பனியான தேசெகூ இற்கு 2004.02.19 ஆம் திகதியன்று கையளிக்கப்பட்டது. தேசெகூ இனால் வழங்கப்பட்ட தேறிய சம்பாத்தியமானது அனைத்து செலவுகளும் சேர்ந்த அடிப்படையில் அறவீடு செய்ததன் பின்னர் பொறுப்புக்களிலிருந்து ஈட்டப்பட்டதாக மநநி இன் ஏடுகளுக்கு எடுக்கப்படுகின்றது. மநி இற்கான அனுப்புதல்கள் தவிர்ந்த தேறிய சம்பாத்தியங்கள் மீளப்பெறப்படாத பொறுப்புக்களுக்கான மிகை வருமானமாகவும் சேர்க்கப்படுகின்றது.

16. அனைத்து திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் கையளிக்கப்பட்டமையால் நிதி முகாமை உடன்படிக்கையின் கீழ் தேசெகூ ஆனது பின்வரும் இரண்டு வகையான பொறுப்புக்களைப் பேணுவதற்கு உடன்படுகின்றது.
17. பொறுப்பு முகாமைத்துவத்தின் தேறிய விளைவானது மஹபொல நியதித்தின் திரும்பலாக தேசெகூ இல் தொடர்ந்தும் சேர்க்கப்படுகின்றது.
18. திரட்டிய நிதிக்கூற்றுக்கள் ஒத்திசைவற்ற செயற்பாடுகள் மற்றும் அவற்றின் தன்மையின் காரணமாக தயாரிக்கப்படவில்லை
19. அத்திட்டிய காணி விற்பனை மீது பெறப்பட்ட மொத்த வருமானம் பாடசாலை அபிவிருத்தி நிதியத்தின் மூலதனமாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. பாடசாலை அபிவிருத்திக்கான நடவடிக்கைகள் மூலதனத்தின் வட்டி வருமானத்தில் மேற்கொள்ளப்படும்.
20. "மஹபொல" மீண்டும் 2009 ஒக்டோபரில் ஆரம்பிக்கப்பட்டதுடன் வர்த்தக அமைச்சினால் பாடசாலை அபிவிருத்திக்கென வருமானத்தைப் பெருக்கும் நோக்குடன் வர்த்தக ரீதியாக பெலியத்தையில் நடாத்தப்பட்ட வர்த்தக கண்காட்சியில் அமைச்சினால் பாடசாலை அபிவிருத்திக்கென மிகையான வருமானம் எதுவும் காணப்படுமிடத்து அது பாடசாலை அபிவிருத்தி நிதியத்திற்கு வர்த்தக அமைச்சினால் அனுப்பி வைக்கப்படுமென கூறப்பட்டிருந்த போதிலும் மிகையான வருமானம் எதுவும் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சினால் இனங்காணப்படவில்லை அத்துடன் பாடசாலை அபிவிருத்திக்காக பெலியத்தை மஹபொலவிலிருந்து எத்தகையை வருமானமும் பெறப்படவில்லையெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரீசீ/ஈ/எம்எச்ஈஎஸ்ரீஎப்/எப்ஏ/2011 2013 சனவரி 03

தலைவர்

மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம்

மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1981 இன் 66 ஆம் இலக்க மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2011 நவம்பர் 01 ஆம் திகதி முதல் நிதியம் சனாதிபதி செயலகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்காகச் சமா்ப்பிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கத்தவராக கூட்டுறவு மற்றும் உள்ளக வியாபார அமைச்சுச் செயலாளராலேயே சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறே 2011 ஆம் ஆண்டிற்கான வரைவு நிதிக்கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 29 ஆம் திகதியே கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2012 ஏப்ரல் 27 ஆம் திகதி மீளதிருத்தப்பட்ட வரைவு நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

2.2.2 கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் இல 26 இன் பிரகாரம் நிதியத்திற்கு முழுமையான உரித்துடைய வரையறுக்கப்பட்ட நெஷனல் வெல்த் கூட்டுத்தாபன நிறுவகம் ஒருங்கிணைக்கப்பட்டு ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2003 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை நிதிக்கூற்றுக்களை ஒருங்கிணைப்பதற்கு நிதியம் செயற்பட்டிருக்கவில்லை.

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2009 ஆம் ஆண்டின் போது கூட்டுறவு மற்றும் உள்ளக வியாபார அமைச்சினால் நடாத்தப்பட்டிருந்த மஹபொல விற்பனைக் கண்காட்சியின் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா 3,270,082 தொகையான மிகை வருமானம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவகத்தில் (SLIIT) முதலீடு செய்யப்பட்டிருந்த மொத்த பணம் ரூபா 461,207,812 ஆன போதிலும் தகவல் தொழிநுட்ப நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களில் இது ரூபா 373,577,393 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 87,630,420 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும், இவ் வேறுபாடு நீண்டகாலமாக பதிவழிக்கப்படுவது குறிப்பு இல. 01 இல் கண்டறியப்பட்டது.

2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு	இணங்காமைகள்
(அ) நி.பி. 264	பெறுனரால் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ரூபா 49,414,250 தொகையான புலமைப்பரிசிற் கொடுப்பனவுகள் தொடர்பாக அத் தேவைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நி.பி. 396(ஈ)

நிதியத்தால் வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 2,628,700 பெறுமதியான 03 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள் மற்றும் நட்டங்கள் மற்றும் பதிவழிப்புகளுக்கு முன்னர் நிதியத்தின் மிகைகள் ரூபா 421,249,846 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள் மற்றும் நட்டங்கள் மற்றும் பதிவழிப்புகளுக்கு முன்னர் முன்னைய ஆண்டின் மிகை ரூபா 435,069,815 ஆனமையால் ரூபா 13,819,969 ஆல் நிதி விளைவுகளில் குறைவொன்று தென்பட்டது. இதற்காக 2011 ஆம் ஆண்டின் போது பங்கிலாப வருமானம் முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

4 செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

நிதியத்தின் மூலம் புலமைப்பரிசில்கள் வழங்கல் தொடர்பான தகவல்கள் மற்றும் சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஆண்டு	பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	பல்கலைக்கழகங் களுக்கு வழங்கப்பட்ட புலமைப்பரிசில்க ளின் எண்ணிக்கை	பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்க ப்பட்ட மாணவர்களின் சதவீதமாக வழங்கப்பட்ட புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை	தொழில்நுட்ப கல்லூரிகளுக்கும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களின் மொத்த எண்ணிக்கை	புலமைப்பரிசில்கள் வழங்கலுக்கான ஏற்பட்ட செலவினம்	புலமைப்பரிசில் வழங்கும் வைபவங்களுக் கான செலவினம்
			%			ரூபா	ரூபா
1999/2000	11,324	5,958	52.6	550	6,508	229,443,550	5,118,665
2000/2001	11,717	6,275	53.5	601	6,876	245,651,650	2,982,856
2001/2002	11,380	6,206	54.5	417	6,623	362,024,850	3,690,075
2002/2003	23,568	12,246	52.0	522	12,768	379,473,500	4,622,591
2003/2004	12,623	8,147	64.5	550	8,697	437,707,100	785,517
2004/2005	13.653	9000	65.9	847	9.847	487,929,950	516,476
2005/2006	15.478	8,009	51.7	1,335	9,344	644,682,550	941,490
2006/2007	15,996	7,799	48.8	1,045	8,844	717,665,900	3,050,987
2007/2008	18,714	9,500	50.7	1,663	11,163	711,135,000	1,328,963
2008/2009	19,340	10,000	52.0	1,500	11,500	695,747,550	2,057,249
2009/2010	20,111	10,000	49.72	1,564	12,574	763,746,500	2,035,922
2010/2011	20,274	10,300	50.80	1,500	11,800	694,519,600	2,876,999

4.2 செயற்பாட்டுத் திறமையின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) புலமைப்பரிசில் வழங்கல்

2011 ஆம் ஆண்டின் போது நிதியத்திற்கு வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களும் அதற்கான கொடுப்பனவுகள் தொடர்பான விபரம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

கல்வியாண்டு	2007/2008	2008/2009	2009/2010
பல்கலைக்கழக அனமதியைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை	18,714	19,340	20,111
நிதியத்தின் பொறுப்பு சபையால் பல்கலைக்கழகங்களுக்காக ஒதுக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை	9,500	10,000	10,000
வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை	8,787	9,006	8,868

இது தொடர்பாகவும் இதற்குரிய கொடுப்பனவுகள் தொடர்பாகவும் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிதியத்தால் புலமைப்பரிசில் பெறுனர்களுக்கு பணம் செலுத்தப்படுகையில் ஒவ்வொரு மாதத்திற்காகவும் குறித்த இறுதித் திகதி தீர்மானிக்கப்பட்டு கொடுப்பனவை மேற்கொள்வதற்கு பல்கலைக்கழகங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவை முறையாக செயற்படுத்தப்பட்டிராமையால் தவணைப்பணக் கொடுப்பனவின் பின்னர் எஞ்சியுள்ள பணம் தாமதமின்றி மீளப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தெரிவுச் செவ்வையின் பிரகாரம், 05 பல்கலைக்கழகங்களின் புலமைப்பரிசின் தவணைக் கொடுப்பனவு 01 மாதம் முதல் 10 மாதங்கள் வரையான காலமாக நிலுவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) **பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகள்**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(I) 2011 யூன் 21 ஆம் திகதியளவில் வகுப்பறைகளுடன் கேட்போர் கூடக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு மாலம்பே ஆண்கள் பாடசாலைக்கு ரூபா 4,366,838 வழங்கப்பட்டிருந்ததுடன் 2011 யூன் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2011 சனவரி 18 ஆம் திகதி கல்வி அமைச்சிற்கும் தனியார் ஒப்பந்தக்காரருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இரண்டாம் நிலைக் கல்வி மற்றும் நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் மூலம் நிதியத்தைப் பெற்று கட்டிடத்தின் I ஆம் கட்ட நிர்மாணிப்பு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டன. உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட தொகை ரூபா 4,022,269 (பெறுமதி சேர் வரி அற்ற) ஆகக் காணப்பட்டது. எனினும், ஈடீ/07/99/07/12/10 ஆம் இலக்க 2010 ஒக்டோபர் 28 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம், மேற்குறித்த கட்டிடத்தின் I ஆம் கட்ட நிர்மாண நடவடிக்கைகளுக்காக மஹபொல நிதியத்தில் இருந்தும் ரூபா 4,366,838 தொகை பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மஹபொல நிதியத்தில் இருந்து அந் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 திசெம்பர் 08 ஆம் திகதி மேற்குறித்த ரூபா 4,366,838 தொகையான பணம் கல்வி அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் இது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. இத் தொகை அது வரையிலும் வேறு பாடசாலைகளின் நிர்மாண வேலைகளுக்காகச் செலுத்துவதற்காக இருந்த ரூபா 4,193,629 தொகையான நிலுவைப் பணக் கொடுப்பனவிற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது.

(iii) 2010 பெப்ரவரி 06 ஆம் திகதி இவ்விடத்தில் காணப்பட்ட பழைய கட்டிடத்தை இடித்தகற்றி வகுப்பறைகளில் இருந்த மாணவர்கள் தற்காலிகக் கட்டிடமொன்றில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். புதிய கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டு மாணவர்கள் அக் கட்டிடத்திற்கு மாற்றப்படுவது உடனடியாகச் செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் 2011 யூன் மாதமளவில் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

II. ஹங்வல்ல ராஜசிங்ஹ வித்தியாலய மைதானத்தை நவீனமயமாக்கவதற்காக ரூபா 22,317,500 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 50/05 ஆம் இலக்க பொறுப்புச் சபைப் பத்திரத்தின் மூலம் இதற்காக ரூபா 20 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் இத் தொகை ரூபா 25 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. 2010 திசெம்பர் 31 வரை இதில் ரூபா 24,046,747 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2011 யூன் 20 வரை மேற்குறித்த மலசலகூடம் மற்றும் குளியலறை முறைமையின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டு இல. 02 இன் பிரகாரம், நிலத்தைத் தயார்படுத்துவதற்காக ரூபா 13,247,500 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் இச் செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்பட்டிராமையால் மைதானத்திற்கு பாரிய சேதம் ஏற்பட்டிருந்த காரணத்தினால் அப் பாடசாலையின் உள்ளக விளையாட்டு நடவடிக்கைகள் நடாத்தப்படுவதில் தடங்கல் ஏற்பட்டிருந்தது. ஆகையால் ஏனைய பயிற்சி நடவடிக்கைகளுக்காக மேலதிகக் கிரயத்தை மேற்கொள்ள நேர்ந்திருந்தமை போன்ற பாதகமான நிலைகளுக்கு பாடசாலை முகம் கொடுக்க நேர்ந்திருந்தது.

4.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

நிதியத்தினால் 2008 ஏப்ரல் 07 ஆம் திகதி முதல் 04 வருட காலத்திற்காக ஒரு பிரதிக்கு ரூபா 2.30 படி (பெறுமதி சேர் வரியுடன்) ஒரு மாதத்திற்கு 3,000 பிரதிகள் பெற்றுக்கொள்ளப்படும் ஒப்பந்தத்தில் பல்நோக்கு கணனி அச்சீட்டு இயந்திரம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதற்காக 2011 ஆகஸ்ட் வரை செலுத்தப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 364,369 ஆகக் காணப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்தம் ஆகக் குறைந்த பிரதிகள் எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காக முடியாதிருந்தமையால் பெற்றுக்கொள்ளப்பட்டிராத 6,144 பிரதிகளுக்காக ரூபா 14,142 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 39/03 ஆம் இலக்க 2002 மே 13 ஆம் திகதிய நம்பிக்கை பொறுப்புச் சபைப் பத்திரத்தின் பிரகாரம், நிதியத்தின் மிகைப் பணத்தை போட்டி நிதிச் சந்தையில் முதலீடு செய்வதன் மூலம் உயரிய உழைப்பைப் பெறக்கூடிய வகையில் நிதியத்தை முகாமைத்துவம் செய்யும் எதிர்பார்ப்பில் ரூபா 200,000,000 தொகையான அடிப்படை மூலதனப் பங்களிப்பின் மூலம் கம்பனி ஒன்று 2003 மார்ச் 23 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.3 இன் பிரகாரம் இப் பண முதலீட்டிற்காக நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், நிதியத்தினால் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முகாமைத்துவத்திற்காக கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 5,125,204,995 ஆகக் காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிதியம் ஈடுபடுத்தப்பட்ட ரூபா 200,000,000 தொகையான அடிப்படை மூலதனத்திற்கு 2003 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை அதாவது 05 ஆண்டுகளுக்காக எதுவித பங்கிலாபமும் பெறப்பட்டிராததுடன் 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்காக பங்கிலாபமாக முறையே ரூபா 5 மில்லியன், ரூபா 4.8 மில்லியன்

தொகையும் ரூபா 60.5 மில்லியன் தொகைகள் பெறப்பட்டிருந்தன. 2011 ஆம் ஆண்டின் நம்பிக்கைப் பொறுப்புச் சபை பத்திர இல. 52/09 இன் பிரகாரம் 2011 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறு மேற்குறித்த கம்பனியின் பங்கிலாபம் ரூபா 74,161,271 ஆன போதிலும் 2011 ஆம் ஆண்டிற்காக நிதியத்திற்கு எவ்வித பங்கிலாபமும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்திடம் இருந்த ரூபா 5,125,204,995 நிதியம் மேற்குறித்த கம்பனியில் முதலீடு செய்யப்படுவதன் மூலம் ரூபா 508,742,060 தொகையான வட்டி வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 7,911,887 தொகை உரிய கம்பனியின் சொத்து முகாமைத்துவக் கட்டணம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புக் கட்டணமாக ரூபா 9,653,445 தொகை கழிக்கப்பட்டதை அடுத்து ரூபா 499,088,615 தொகை நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. நிதியம் வரியில் இருந்து விடுவிக்கப்பட்ட நிறுவனமாக இருந்தமையால் மேற்குறித்த பணம் நேரடியாக முதலீடு செய்யப்பட்டிருப்பின் ரூபா 9,653,445 தொகையான பணத்தை சேமிக்கக்கூடியதாக இருந்திருக்கும்.

(iii) 2004 ஆம் ஆண்டின் பின்னர் மேற்குறித்த கம்பனி செயற்பாடற்ற நிலையை அடைந்திருந்ததுடன் போட்டியின்றி சந்தையில் செயற்பட்டிருந்தமையால் போட்டி வட்டி வீதங்களைப் பார்க்கிலும் குறைவான வட்டியை நிதியம் பெற்றிருந்தது.

(ஆ) இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவனம்

(i) மஹபொல பொறுப்பாண்மை சபை மற்றும் இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவனத்திற்கிடையே 2005 நவம்பர் 14 ஆம் திகதி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் 4(பீ) ஆம் பிரிவின் பிரகாரம் மஹபொல நிதியச் செயலாளர், பிரதான கணக்காளர் மற்றும் மேலும் கல்வி மற்றும் தொழிற்தகமைகள் பெற்றுள்ள மூன்று உத்தியோகத்தர்கள், இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவனத்தில் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தில் இருந்து இரு அங்கத்தவர்களும் நிதியத்திற்கு வெளியிலிருந்து மூன்று அங்கத்தவர்களுமாக ஐந்து அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ii) உடன்படிக்கையின் 5(அ) (ii) ஆம் பிரிவின் பிரகாரம், இலங்கை தகவல் தொழிநுட்ப பட்டப்படிப்பிற்காக 25 புலமைப் பரிசுகளை நிதியத்தின் பெயரில் வழங்குவதற்கு செயற்பட வேண்டிய போதிலும் இது வரையில் புலமைப்பரிசில்களை வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) உடன்படிக்கையின் 4(ஓ) பிரிவின் பிரகாரம், நிதியத்தினால் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணி இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவனத்தினால் (SLIIT) பத்து ஆண்டுகளில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியதுடன், அவ்வாறு பயன்படுத்தப்படவில்லையாயின் அக்காணியை வேறு செயற்திட்டத்திற்கு பயன்படுத்துவதற்கு நிதியத்திற்கு உரிமை இருந்த போதிலும் மேற்குறித்த பாத்தாண்டு கால எல்லையில் 05 ஆண்டுகளுக்கு மேல் கடந்திருந்த போதிலும், 2012 திசெம்பர் 18 ஆம் திகதி வரை அபிவிருத்திச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

4.5 பதவியணி நிர்வாகம்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் பதவியணி பின்வருமாறாகக் காணப்பட்டது.

பதவியணியினர் வகை	அங்கீகரிக்கப்பட்டவை	உள்ளபடியானவை	வெற்றிடங்கள்
நிறைவேற்று	05	04	01
நிறைவேற்றுத்தரமற்ற	11	04	07
கனிஷ்ட	03	02	01
	19	10	09

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 19 ஆகக் காண்பிக்கப்பட்ட போதிலும் இதற்காக 12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் நிறைவேற்றுத்தரத்தின் 03 பதவிகள் 60 வயதுக்கு மேற்பட்ட ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த ஒரு உத்தியோகத்தராலும் பதில் கடமை நியமனங்கள் 02 இன் மூலமும் நிரப்பப்பட்டிருந்தன.

(இ) நிதியத்தின் பிரதான நிறைவேற்றுனரான பணிப்பாளர் அவர்களும் 60 வயதிற்கு மேற்பட்ட மற்றும் மாதாந்தம் ரூபா 12,000 தொகையான பதில் கடமைப் படிப்பணத்தைப் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர் ஆவார்.

(ஈ) கனிஷ்ட சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இரு உத்தியோகத்தர்களும் அமைய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் அந்த ஊழியர்களுக்கும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தருக்கும் 12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.10 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிதியத்தின் தலைவருக்கு அறிக்கையிடப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதியத்தின் முகாமை
(இ) புலமைப்பரிசில்
(ஈ) பாடசாலை அபிவிருத்தி நிதியம்
(உ) பதவியணி

ஒப்பம். எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2011.12.31 ஆம் ஆண்டுக்கான மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானங்கள் மீதான கருத்துரை

இது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2013.01.03. ஆம் திகதிய TC/E/MHESTF/FA/2011 ஆம் இலக்கம் கொண்ட அறிக்கை தொடர்பானது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2011 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவேண்டிய 2011 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி லொத்தர் சபையின் பங்குலாபங்கள் மேற்குறித்த நிறுவனத்தின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன்பின்னர், கூற்றுக்கள் புதுப்பிக்கப்பட்டு மீளவும் சமர்ப்பிக்கப்பட்டன.

2.2.2 கணக்கீட்டு நியமங்கள்

இந்த விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

அ) கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் தனது 2011.02.24 ஆம் திகதிய 2-9/MTF/2009 ஆம் இல. கடிதத்தின் மூலமாக நிதியத்திற்கு செலுத்துவதற்கு தங்களிடம் பணம் எதுவுமில்லையெனத் தெரிவித்துள்ளதுடன் உரிய தொகையினை செலுத்த முடியாமை தொடர்பில் தமது நிலைப்பாட்டினைத் தெளிவு படுத்தியுள்ளனர். ஆகையால், அதனை கணக்குகளுக்கு கொண்டு செல்ல முடியவில்லை.

ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானங்களின்படி, 2006 ஆம் ஆண்டிலிருந்து 30 வருட ஒப்பந்த காலப்பகுதியினுள் மூலதனமாக்கப்பட்ட ரூபா 175 மில்லியன் தொகையுடைய கடனுக்கான வட்டியான ரூபா 87,630,420 மஹபொல நிதியத்தின் ஏடுகளிலிருந்து பதிவளிப்புச் செய்யப்பட்டது.

2.2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்காமை

அ) அரசாங்க திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் நிதிப்பிரமாணங்களுடன் இணங்கி அதற்கமைவாக செயற்படுதல் வேண்டும். நிதியமானது தேவையேற்படும் போது மட்டும் இந்த ஒழுங்குவிதிகளைப் பின்பற்றுகின்றது.
புலமைப் பரிசில் கொடுப்பனவுக்காக வழங்கப்படும் ஒவ்வொரு காசோலையும் கொடுப்பனவாளரின் பற்றுச்சீட்டின் மூலமாக உறுதிப்படுத்தப்படுவதுடன் இத்தகைய கட்டுப்பாட்டு நடைமுறை அமுல்படுத்தப்படுவதன் காரணமாக தவறேதும் இடம்பெற்றிருக்கவில்லை.

ஆ) இது திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிசார் பெறுபேறுகள்
இது ஒரு விளக்கமளித்தலாகும்.

4. தொழிற்பாட்டு மீளாய்வு

ஒதுக்கீடு செய்யப்பட்ட புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலான பல்வேறுபட்ட புலமைப்பரிசில்கள் பரிசளிக்கப்பட்டுள்ளன. போதுமான எண்ணிக்கையுள்ளமையினால் மொத்த புலமைப்பரிசில்களும் பரிசளிக்கப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் அத்தகைய புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையானது மாணவர்களினால் அடையப்பெற்ற கல்விசார் முன்னேற்றத்திலும் உரிய பாடநெறிகளின் விடுமுறையிலும் தங்கியுள்ளது.

4.2 <u>தொழிற்பாட்டு குறைபாடுகள்</u>

அ) <u>புலமைப்பரிசில் பரிசளிப்பு</u>

i) இத்தகைய குறைபாடுகள் ஒரு சில பல்கலைக்கழகங்களில் மாத்திரம் காணப்படுவதுடன் குறித்த நிறுவனங்கள் இத்தகைய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளன. ஒவ்வொரு மாதத்திலும், பல்கலைக்கழகங்கங்கள் தாமதமில்லாமல் தவணைக் கட்டணங்களை செலுத்தியதன் பின்னர் மீதி பணத்தினை அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

ii) இந்நிலைமையின் காரணமாக பல்கலைக்கழகங்களின் நிருவாக விடயங்களில் எதிர்ப்பு நடவடிக்கைகள் எழுந்துள்ளன.

ஆ) <u>பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகள்</u>

1. (i) இந்நிதியமானது கல்வி அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. அத்தகைய நடவடிக்கைகளை பின்பற்றுவதற்கும் இத்தகைய தவறுகளை திருத்துவதற்கும் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ii) பாடசாலையின் நிருமாண வேலைகளுக்கு இந் நிதிகள் பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) நிருமாணப் பணியானது மாகாண கல்வி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

11. (i) உரிய நிருமாணத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட தொகையினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுள்ளன.

நிருமாண பணியினை பூர்த்தி செய்வதற்குத் தேவைப்படும் மேலதிக தொகை கல்வி அமைச்சினால் வழங்கப்படும்.

(ii) விளையாட்டு மைதானத்தின் நிருமாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் இது முறையாக பேணப்படுதல் வேண்டும். ஏனெனில் நாளுக்கு நாள் ஏற்படும் மண் அரிப்பின் காரணமாக சேதமடைந்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

4.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

எமது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின்படி, பிரதிகள் பெற்றிருந்தாலும் அல்லது பெற்றிருக்காவிட்டாலும் இறையாக மாதாந்தம் ரூபா 3000/- செலுத்தப்படுதல் வேண்டும். எந்தவொரு முதலீட்டாளரும் வருமானம் எதுவுமின்றி பல்தேவை கணனி பிறின்ரரொன்றினை குத்தகைக்கு வழங்க மாட்டார். இது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆகக் குறைந்த செலவாகும். குறித்த பொருளினை நாம் கொள்வனவு செய்ய வேண்டியிருந்திருப்பின் சந்தர்ப்ப செலவு அதிலும் பார்க்க அதிகமாக இருந்திருக்கும். ஆகையால் இந்த முறையானது பயன்மிக்கதாகும்.

4.4 தொடர்புடைய விடயங்கள்

அ) 2011 ஆம் ஆண்டுக்கான பங்குலாபம் ரூபா.36 மில்லியன் பின்னதாக வழங்கப்பட்டது.

ஆ) இது கம்பனியாக இருப்பதால், இது வருமான வரியிலிருந்து விலக்களிக்கப் படுவதில்லை.

இ) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம்

1) உடன்படுகின்றேன்.

11) இத்தகைய புலமைப்பரிசில்கள் வருடாந்தம் பரிசளிக்கப்படுகின்றன.

111) அபிவிருத்தி கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

4.5 <u>ஆளணி நிருவாகம்</u>

அ) சட்டத்தின்படி, அதன் பதவியினரை நியமிக்கும் அதிகாரம் மஹபொல நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கே உள்ளது. இத்தகைய நியமனங்கள் மேதகு பிரதம நீதியரசரின் தலைமையின் கீழ் நடாத்தப்டும் அதன் கூட்டத்தில் மஹபொல நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் முறையாக அங்கீகரிக்கப்படும்.

ஆ) இந்த நியமனங்கள் சேவையின் தேவை கருதி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இ) நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையானது சீரான முறையில் அதன் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உரிய துறையிலுள்ள அநுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்களின் சேவையினை எதிர்பார்க்கின்றது. ஆகையால், இத்தகைய உத்தியோகத்தர்கள் அவர்களின் சேவையின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

ஈ) திரட்டு நிதியத்தின் கீழ் இந்நிதியம் வராமையினால் இது ஒரு பொது தொழில் முயற்சி நிறுவகமல்ல. ஆகையால், நிதியமானது குறித்த திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படவில்லை. பதவியினரின் சம்பளங்களும் படிகளும் சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்களின் கீழ் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தற்துணிவில் தீர்மானிப்பட்டுள்ளன.

5. <u>முறைமைகளும் கட்டுப்பாடுகளும்</u>

கருத்துரைகள் குறிப்பீடு செய்யப்பட்டன.

ஒப்பம்/ ரஞ்சித் தேநுவர,

பணிப்பாளர்,

மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்.